# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - இரண்டாம் உலகப்போர் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

**பதில் :** 1. முசோலினி (இத்தாலி)
2. ஹிட்லர் (ஜெர்மனி)
3. பிராங்கோ (ஸ்பெயின்)

2) ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?

**பதில் :** 1. ஹிட்லர் தனது வல்லமைமிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்க பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் இராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.
2. மேலும் இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் மக்களின் ஆதரவைத் திரட்டினார். ஒன்று ஜெர்மனியினரே சுத்தமான ஆரிய இனம் எனும் இன உயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு என்பனவாகும்.

3) முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.(அல்லது) இரண்டாம் உலகப்போரின் போது முத்து துறைமுகம் தாக்கப்பட்டு நிகழ்வு எங்கனம் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்தது?

**பதில் :** 1. 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத் தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும் தாக்குதலைத் தொடர்ந்தன.
2. இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர் விமானங்களும் அழிக்கப்பட்டன.
3. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. சீனாவும் பிரிட்டனும் அமெரிக்காவுடன் இணைந்தன.
4. இதனால் ஆசிய பசிபிக் போரும் ஐரோப்பியப் போரும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் காரணத்திற்கான போராக மாறியது.

4) பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?

**பதில் :** 1. 1942 இல் பிரிட்டன் பெவரிட்ஜ் அறிக்கை என்றழைக்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டது.
2. அவ்வறிக்கையில் பொது நலனுக்குப் பெருந்தடைகளாக உள்ள வறுமை, நோய் ஆகியவற்றை வெற்றிகொள்ள, பொதுமக்களுக்கு அதிக வருமானத்தை அளிக்க தீர்மானித்தது.
3. உடல்நலப் பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் பல திட்டங்கள் தொகுப்பாக இடம் பெற்றிருந்தன.

5) பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** 1. "பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்" எனக் குறிப்பிடப்படும் உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944 இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பின் 1945 இல் நிறுவப்பட்டன.
2. இவ்விரு நிறுவனங்களும் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளன.

6) பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?

**பதில் :** 1. உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது.
2. நிதிநிலையை உறுதியானதாக வைத்திருத்தல்.
3. பன்னாட்டு வணிகத்திற்கு வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுப்பது.
4. வேலை வாய்ப்பினைப் பெருக்குவது.
5. நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடைதல்.
6. உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

7) முதல் உலகப் போருக்கு பின்னர் ஜெர்மனியின் சமூக பொருளாதார நிலை என்ன?

**பதில் :** (i) முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனி பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கடுமையான பணவீக்கத்தையும் அனுபவிக்க நேர்ந்தது

(ii) மேலும் அதனுடைய காகித ரூபாய்கள் முழுமையாக மதியிழந்தனர். சாதாரண மக்கள் ரொட்டி வாங்குவதற்காக சக்கரங்கள் பொறுத்தப்பட்ட வண்டிகளில் பணத்தை எடுத்துச் செல்வது போன்ற பல படங்கள் 1920 களில் வெளியாயின

8) மியூனிச் உடன்படிக்கை - குறிப்புத் தருக

**பதில் :** (i) 1938 இல் இங்கிலாந்தின் பிரதம மந்திரி சேம்பர்லின் ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கை மேற்கொண்டார்

(ii) இது செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்து அதன் ஜெர்மன் மொழி பேசும் பகுதியான சூடட்டன்லாந்தை ஜெர்மனி இணைத்துக் கொண்டதை வெட்கமின்றி ஒத்துக் கொள்வதாக அமைந்தது

(iii) இருந்த போதிலும் 1939 இல் சோவியத் யூனியன் ஜெர்மனியுடன் ஒருவர் மீது மற்றொருவர் படையெடுப்பதில்லை என ஒப்பந்தம் செய்து கொண்டது

9) ஜெர்மனி ரஸ்யாவின் மீது படையெடுத்தது பற்றி எழுதுக

**பதில் :** (i) 1941 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஜெர்மன் படைகள் ரஷ்யாவின் மீது படையெடுத்தன.

(ii) ஜெர்மன் மக்களைக் குடியேற்றுவதற்குத் தேவையான முக்கிய நிலப் பகுதிகளைப் பெறுதல், கம்யூனிச ஆட்சியை ஒலிப்பது, ரஷ்யாவின் இயற்கை வளங்களைக் குறிப்பாக எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவது போன்ற நீண்டகால நோக்கங்களுடன் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது

10) சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பை ஜெர்மனியால் தாக்கு பிடிக்க முடியவில்லை ஏன்?

**பதில் :** (i) ஜெர்மன் படைகளின் தாக்குதல் தந்திரமான மின்னல் வேகத் தாக்குதல் தொடக்கத்தில் வெற்றிகளை நல்கியது

(ii) மிக விரைவில் ரஷ்யாவிற்குள் 1000 மைல்கல் வரை ஜெர்மன் படைகள் ஊடுருவின. பின்னர் ஜெர்மன் படைகள் மாஸ்கோவை நோக்கிப் புறப்பட்டன

(iii) ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு ரஷ்யாவின் கொடூரமான குளிர் ஆகிய காரணங்களால் ஜெர்மன் படை தோல்வியுற்றது

11) ஹிட்லரின் முடிவு பற்றி எழுதுக

**பதில் :** (i) ஜெனரல் ஐசனோவரின் தலைமையிலான நேச நாட்டுப் படைகள் பிரான்ஸ் நாட்டின் நார்மண்டியின் மீது படையெடுத்தன ஜெர்மன் படைகள் மெதுவாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டன

(ii) ஆனால் ஜெர்மன் படைகள் தொடர்ந்து எதித்துப் போர் செய்ததால் போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து இறுதியில் 1945 ஆம் ஆண்டு மே திங்களில் போர் முடிவுற்றது

(iii) ஹிட்லர் 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தற்கொலை செய்து கொண்டார்

12) இத்தாலி எவ்வாறு சரணடைந்தது?

**பதில் :** (i) இத்தாலியில்  தூக்கியெறியப்பட்டார் புதிய இத்தாலி அரசு 1943 இல் நேச நாடுகளிடம் சரணடைந்தது

(ii) இருந்தபோதிலும் ஜெர்மனி வடக்கே ஒரு பொம்மை அரசே நிறுவி அதில் முசோலினியை அமரவைத்தது. 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முசோலினி இத்தாலியக் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்

13) ஃபிட்லர் ஆன் ரூஃப் (Riddler on Roof) எனும் திரைப்படம் பற்றி உன் கருத்து என்ன?

**பதில் :** (i) ஃபிட்லர் ஆன் ரூஃப் என்னும் திரைப்படம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்ட யூத எதிப்பு நடவடிக்கைகளைப் பற்றியதாகும்

(ii) ஜார் அரசின் ஆணைப்படி ஒரு யூத கிராமத்திலிருந்து யூதர்கள் அனைவரும் அக்கிரமத்தை விட்டு வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டதை இத்திரைப்படம் காட்சிப்படுத்தியது

14) ஐநாவின் இதர முக்கியத் துணை அமைப்புகள் பற்றி குறிப்பிடுக

**பதில் :** (i) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO), உலக சுகாதார நிறுவனம் (WHO), யூனெஸ்கோ (UNESCO) என்பனவாகும். யுனிசெப் (UNICEF) இது உலகம் முழுவதும் உள்ள குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தையும் ஏனைய நலன்களையும் முன்னெடுக்கப் பணி செய்கிறது

(ii) மற்றொன்று ஐ.நா வளர்ச்சி திட்டம் (UNDP) இது வளர்ச்சித் திட்டங்களில் கவனம் குவிக்கிறது

15) அமெரிக்கா ஏன் ஜப்பான் மீது அணுகுண்டு வீசியது?

**பதில் :** 1. ஜப்பானியப் படைத்தளபதிகள் சரணடைய மறுத்த போது அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது ஒரு அணுகுண்டை வீசியது.

2. இதன் பின்னரும் ஜப்பானியர் சரணடைய மறுத்ததால் மற்றொரு அணுகுண்டு நாகசாகியின் மீது வீசப்பட்டது. இறுதியில் ஜப்பான் சரணடைந்தது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

**பதில் : உலகம் இரு அணிகளாகப் பிரிதல்:**

1. வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது.
2. ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது.
3. மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது.
4. கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது. .

**அணு ஆயுதப்பரவல்:**

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத்யூனியனும் அணுஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன.
2. பல நாடுகளில் ராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

**பன்னாட்டு முகமைகள்:**

பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபை, உலகவங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இவை பெரிய மற்றும் சிறிய நாடுகளுக்குப் பொது இடமாகத் திகழ்ந்தன.

**சமூகப் பொருளாதார மாற்றங்கள்:**

1. காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர்.
2. அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது.

17) ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க

**பதில் : ஐ.நா. சபை**

1. அனைத்து நாடுகளிலும் அமைதி நிலவிடவும் மக்கள் தங்கள் வாழ்வை அச்சமின்றி சுதந்திரமாக வாழ்ந்திடவும் ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
2. ஐ.நா சபையின் சாசனத்தில் 1945 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாள் 51 நாடுகள் கையெழுத்திட்டன.
3. தற்போது ஐக்கிய நாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ, ஐக்கிய நாடுகள் சபையில் சமமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

**பொதுச்சபை:**

1. பொதுச்சபை எனும் அமைப்பில் ஒவ்வொரு நாடும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.
2. இவ்வமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை கூடி நாடுகளின் நலன் சார்ந்த அம்சங்களும், முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன.

**பாதுகாப்பு சபை:**

1. பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
2. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாவர். ஏனைய பத்து உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.
3. ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும், மறுப்பாணை அதிகாரம் (veto power) உண்டு. எந்த முடிவையும் இதன்மூலம் தடுத்துவிடலாம்.

**நீர்வாக அமைப்பு:**

1. ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும்.
2. இதன்பொதுச்செயலாளர், பொதுச்சபையில், பாதுகாப்புச் சடையின் பரிந்துரையின் படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
3. பொதுச் செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐ.நா சபையை நடத்துகிறார்.
4. பன்னாட்டு நீதிமன்றம் ஐ.நா. சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும். இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.
5. பொருளாதார மற்றும் சமூகமன்றம் ஐ.நா.சபையின் ஐந்தாவது அங்கமாகும்.

**ஐ.நா.வின் இதா முக்கியத் துணைஅமைப்புகள்**

1. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு - (FAO)
2. உலக சுகாதார நிறுவனம் - (WHO)
3. ஐ.நா. வின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு - (UNIISCO)
4. ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் - (UNICII)
5. ஐ.நா. வளர்ச்சி திட்டம் - (UNDP)

**ஐ.நா வின் செயல்பாடுகள்:**

1. கடந்த பல பத்தாண்டுகளில் உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐ.நா. சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
2. 1960 களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.
3. மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகால மாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐ.நா. சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.
4. ஐ.நா. வின் அமைதிப்படை உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அடிப்படை பணி செய்துள்ளது. அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய ராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

18) அடால்ப் ஹிட்லரின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரையவும்.

**பதில் : அடால்ப் ஹிட்லரின் எழுச்சி:**

1. ஹிட்லர் தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சி மிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாகவும் கூறி மக்களை தன்பக்கம் ஈர்த்தார்.
2. தேசிய சமதர்மவாதிகள் கட்சியை நிறுவினார். இது நாசிக்கட்சி என்று அழைக்கப்பட்டது.
3. இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் மக்களின் ஆதரவைத் திரட்டினார்.
4. ஒன்று ஜெர்மனியரே சுத்தமான ஆரிய இனத்தவர் எனும் இனஉயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு ஆகும்.
5. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளுக்கு நேரெதிராக ஹிட்லர் ஜெர்மனியின் ராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்கத் துவங்கினார்.
6. ஆயுதப் படைகளுக்கான ஆள் சேர்ப்பு, ராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்களையும் ஏனைய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவுதல் போன்றவற்றால் ஜெர்மனியின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றதோடு வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையும் ஹிட்லரால் தீர்த்து வைக்கப்பட்டது.
7. ஹிட்லர் படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்ட ரைன்லாந்தின் மீது 1936 இல் படையெடுத்தார்.
8. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானுடன் இணைந்து ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு உடன்படிக்கை செய்து கொண்டது.
9. ஹிட்லர் 1938 இல் ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லாவாகியா நாடுகளைக் கைப்பற்றினார்.
10. 1939 ல் போலந்தைத் தாக்கி அதையும் கைப்பற்றினார்.

**ஹிட்லரின் வீழ்ச்சி:**

1. இரண்டாம் உலகப்போரின் தொடக்கத்தில் பல வெற்றிகளைப் பெற்றிருந்தபோதிலும் ஜெர்மனி 1940 இல் நடைபெற்ற பிரிட்டன் போரின் இறுதியில் தோல்வியடைந்தது.
2. 1941 ஆம் ஆண்டு ரஷ்யாவின் மீது படையெடுத்த ஜெர்மனி மின்னல் வேகத்தாக்குதலால் தொடக்கத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு, ரஷ்யாவின் கடுமையான
3. குளிர் ஆகிய காரணங்களால் தோல்வியுற்றது.
4. 1942 இல் நடைபெற்ற போரிலும் ஹிட்லரின் நம்பிக்கைக்கு எதிராக ரஷ்யமக்கள் சோவியத் அரசுக்கு ஆதரவு அளித்ததால் ஜெர்மனி படைகள் மேலும் முன்னேறுவது தடுத்து நிறுத்தப்பட்டது.
5. 1942 இல் நடைபெற்ற எல் அலாமெய்ன் போரில் ஜெர்மனி நேசநாட்டுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டது.
6. 1943 இல் இத்தாலி சரணடைந்தது.
7. 1945 இல் முசோலினி இத்தாலிய கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.
8. இத்தொடர் தோல்விகளால் ஹிட்லர் 1945 ஏப்ரலில் தற்கொலை செய்து கொண்டார்.

19) பன்னாட்டு நிதியமைப்பு (International Monetary Fund) பற்றி விவரிக்கவும்

**பதில் :** (i) பன்னாட்டு நிதியமைப்பானது அடிப்படையில் ஹேரி டேக்ஸ்டர் ஒயிட் ஜான் மேனார்டு கெயின்ஸ் எனும் புகழ்பெற்றப் பொருளாதார நிபுணர்களின் மூலையில் உத்த குழந்தையாகும்

(ii) இவ்வமைப்பு 1945 - இல் 29 உறுப்பு நாடுகளைக் கொண்டு முறையாக தொடங்கப் பெற்றது தற்போது 189 நாடுகள் இவ்வமைப்பில் உறுப்பு நாடுகளாக உள்ளன.

(iii) இதனுடைய அடிப்படை நோக்கம் உலகம் முழுவதிலும் நிதிமற்றும் வளர்ச்சியின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்துவதாக இதனுடைய முக்கிய நிகழ்ச்சி நிரல் பன்னாட்டளவில் நிதிசார்ந்த ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பன்னாட்டு வணிகத்தையும் நாணயச் செலவாணியையும் உறுதியாக செலவாணியையும் உறுதியாக வைத்திருத்தல் ஆகியவையாகும்.

(iv) இவ்வமைப்பு பணம் செலுத்துவதில் சமநிலைப் பிரச்சனைகளை (ஏனினில் இந்நாடுகளால் தங்கள் இறக்குமதிக்கு பணம் செலுத்த முடிவதில்லை.) சந்திக்கும் நாடுகளுக்குக் கடன் வழங்கும் ஆனால் கடன் வாங்கும் நாடுகள் மீது இவ்வமைப்பு வரவு செலவுத்திட்டங்களைச் சுருக்குதல் செலவுகளைச் சுருக்குதல் போன்ற கடுமையான நிபந்தனைகளை சுமத்துகிறது

(v) இந்நடவடிக்கை பெரும்பாலும் வளரும் நாடுகளால் விரும்பப்படுவதில்லை. ஏனெனில் அவை மக்களுக்கு மானியம் வழங்கும் பல்வேறு திட்டங்களை கைவிட வேண்டிய சூழல் உருவாகிறது